மலிவு விலையிலே அல்லது ஜனதா இரகங்களைத் தயார் செய்கின்ற இந்தத் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறோம். விலையை நாம் உயர்த்தவே கூடாது என்கிற அளவுக்கு வருமேயானால் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை தடைபடக்கூடிய சூழ்நிலை தான் ஏற்படும்.

உதகமண்டலத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

*வினா எண். 723—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா:—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் ஒரு ஸ்டேடியம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள 'பீரிக்ஸ்' பள்ளி (BREEKS SCHOOL) மைதானத்தில் ரூ. 6,00,000 பொருட்செலவில் விளையாட்டரங்கமொன்று கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. முதற்கட்டமாக இதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு Pan and Estimate) கேட்கப்பட்டுள்ளது. வந்த பின்னர் ஸ்டேடியம் அமைக்க தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.30)

திரு. கே. உச்சி: தலைவரவர்களே: அந்தத் திட்டத்தைப் பற்றிக் கடந்த ஓராண்டுக் காலமாக நீலகிரி மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அந்த இடங்களைப் பெறுவதில் மிகவும் சிரமம் ஏற்பட்டுப் பெற்றிருக்கிறார்கள். எனவே, இதை உடனடியாகச் செயல்படுத்த இந்த ஆண்டிலேயே துவக்குவதற்கு உத்தேசிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது பிளான்ஸ் அன்ட் எஸ்டிமேட்ஸ் அதாவது திட்டம் மற்றும் மதிப்பீடு வரவில்லை என்ற குறிப்புதான் இருக்கிறது. வந்தவுடன் அதைப்பற்றிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கல்லன்: மாண்புமிகு தலைவரவர்களே, கட்டப்பட இருக்கும் இந்த ஸ்டேடியம் எந்தெந்த விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, விளையாட்டரங்கத்தைக் கட்டுகிறோம். அதில் என்னென்ன விளையாட முடியுமோ அதற்கு அந்த அனுமதியைத் தருவார்கள். அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் விவரம் இல்லை.